# DEPOSITION OF WITNESS
## (Rule 42 and Judicial Form No.53 of Criminal Rules of Practice, 2019)
## THE SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC AND ST (PoA) ACT, SALEM
## Spl. Sessions Case No.17/2026

Deposition of Prosecution witness – PW.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தரணிராஜ் | Taluk | : | பெத்தநாயக்கன்பாளையம் |
| Father's Name | : | விஜயன் | Calling | : | கல்லூரி மாணவர் |
| Village | : | உமையாள்புரம் | Age | : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) of the 12th day of August, 2026.

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா உமையாள்புரத்தில் வசித்து வருகிறேன். கல்லூரியில் படித்து வருகிறேன். சாட்சிகள் விஷ்வா, கார்த்திக் ஆகியோரை எனக்கு தெரியும். நான் ஆதிதிராவிடர் பட்டியல் சமூகத்தை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 17.01.2026 அன்று மாலை சுமார் 05.05 மணிக்கு ஸ்ரீதர் எனக்கு போன் செய்து உமையாள்புரம் பள்ளிக்கூடம் அருகே தன்னை அடித்து விட்டார்கள் என்று சொன்னார். என்னை நேரில் வரும்படி சொன்னார். அப்போது ஸ்ரீதர் ஆஜர் எதிரிகள் மூன்று பேரையும் காட்டி அவர்கள் தன்னை கல்லால் அடிப்பதாக கல்லால் தன்னை இடது பக்க அல்லையில் அடித்ததாக சொன்னார். நான் ஸ்ரீதரிடம் என்ன பிரச்சனை

என்று கேட்டபோது அவர் தாங்கள் அங்கு ஃபோட்டோ எடுக்க வந்ததாகவும் அப்போது எதிரிகள் பறதேவடியா பசங்களா என்று திட்டியதாகவும் சொன்னார். ஸ்ரீதர் கீழே விழுந்ததால் அவரை வாழபாடியில் உள்ள பாலா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். நானும் சங்கரும் ஸ்ரீதரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை வழங்கிவிட்டு பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்னர் அங்கிருந்து ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

சம்பவ இடத்திலிருந்து எனது வீடு சுமார் 500 மீட்டர் தூரத்தில் உள்ளது. போன் வந்த சுமார் ஐந்து நிமிடங்களில் நான் அங்கு போய்விட்டேன். நாங்கள் இருவர் மட்டும் தான் அங்கு போனோம். நாங்கள் போய் பார்த்தபோது ஸ்ரீதர் சற்று மயக்க நிலையில் இருந்தார். ஸ்ரீதர் என்ன நடந்தது என்று சொல்ல முடியாத நிலையில் இருந்தால் என்று சொன்னால் சரியல்ல. அவர் மயக்க நிலையில் ஆனால் பதில் சொல்லும் நிலைமையில் இருந்தார். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் ஸ்ரீதர் சொல்லித்தான் எனக்கு சம்பவம் தெரிய வந்தது என்று சொன்னால் சரிதான். ஸ்ரீதர் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து பயணம் செய்யும் நிலைமையில் தான் இருந்தார். 108 ஆம்புலன்ஸில் அவரை அழைத்துச் செல்லவில்லை. ஸ்ரீதர் என்னிடம் சொன்னார் தகவலை எனது மாமா சங்கரிடமும் சொன்னாரா என்று

எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் இருந்து பெத்தநாயக்கன்பாளையம் ஜி.எச். தான் அருகில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அருகில் இருந்த பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லாமல் வாழப்பாடியில் இருந்த பாலா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு செல்வதற்கான சிறப்பான காரணம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால் ஸ்ரீதருக்கு ஏற்கனவே வயிற்றில் ஒட்டுக்குடல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது அவரை அங்கு அழைத்துச் சென்றோம். ஸ்ரீதருக்கு வயிற்றில் காயம் இருந்தது ஸ்ரீதர் என்னிடம் சொன்ன தகவல்களை பாலா மருத்துவமனையில் இருந்த மருத்துவரிடம் சொன்னாரா என்று எனக்கு தெரியாது. நான் ஸ்ரீதரை சிகிச்சைக்கு அனுமதித்து விட்டு மருத்துவமனையில் இருந்து வெளியில் நான் வந்து விட்டேன். பாலா மருத்துவமனையில் ஸ்ரீதருக்கு துண்டு சீட்டு எதுவும் எழுதிக் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. அது ஸ்ரீதரின் அப்பா அம்மாவுக்கு தான் தெரியும். ஸ்ரீதருக்கு சிகிச்சை முழுவதும் வழங்கப்பட்ட சமயத்தில் ஸ்ரீதரின் பெற்றோர் மட்டும் தான் கூட இருந்தார்களா என்று கேட்டால் ஸ்ரீதரின் பெற்றோரும் சித்தி சித்தப்பாவும் கூட இருந்தார்கள். பாலா மருத்துவமனையில் இருந்து ஸ்ரீதரை அவரது பெற்றோர் மாலை சுமார் 06.00 – 6 30 மணிக்கு மேல் அழைத்துச் சென்று விட்டார்கள். ஸ்ரீதர் பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையில் தனக்கு எங்கு அடிபட்டது எவ்வாறு அடிபட்டது என்று சொன்னார். பாலா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது ஸ்ரீதர் மயக்க நிலையில் இருந்தார். பெத்தநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அவர் சுயநினைவுடன்

இருந்தார். மருத்துவர் ஸ்ரீதரை விசாரித்த போது நான் கூட இல்லை. ஸ்ரீதர் எனக்கு மாமா மகன் முறை. ஸ்ரீதர் எனது மாமா மகன் முறை என்பதால் நான் அவருக்கு அனுசரனையாக வழக்கில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஸ்ரீதரை பார்த்த போது அவருக்கு ரத்த காயங்கள் எதுவும் இல்லை. எதிரிகள் யாரும் ஸ்ரீதரை அடிக்கவில்லை என்றும் அதனால் அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும் நான் வழக்கறிஞர் படிப்பு படிப்பதாலும் ஸ்ரீதர் எனக்கு மாமா மகன் முறை என்பதாலும் எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்து அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பாலா மருத்துவமனையில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. பாலா மருத்துவமனைக்கு நான் ஸ்ரீதரை அழைத்து சென்றேன். அப்போது ஸ்ரீதரின் பெற்றோரும் அங்கு வந்து சேர சரியாக இருந்தது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து தான் பாலா மருத்துவமனைக்குள் போனோம் என்று போலீஸ் விசாரணையில் நான் சொல்லி இருக்கிறேனா என்று கேட்டால் போலீசார் அது குறித்து என்னிடம் கேட்கவில்லை. அதனால் நான் சொல்லவில்லை ஸ்ரீதரை ஆஸ்பத்திரியில் கொண்டு போய் சேர்த்தது ஸ்ரீதரின் பெற்றோர் தான் என்றும் நான் போய் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். தனியார் மருத்துவமனையில் ஆலோசனை பெற்றுக் கொண்டு எவ்வாறு கொண்டு போய் அரசு மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு போய் அரசு மருத்துவமனையில் சேர்த்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.நான் சொல்வது போல் ஸ்ரீதர் எதிரிகள் யாரையும் என்னிடம் அடையாளம் காட்டவில்லை என்றும் அவர்

அடையாளம் காட்டியதாக நான் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் தான் என்ற முறையில் தான் எதிரிகளை எனக்கு தெரியும் என்று சொன்னார் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

| |
|---|
| Taken down before me in open court, in the presence of Accused, under my personal direction, interpreted / read over to the witness and admitted by the witness to be correct. |
| Sd/-R. Thothiramary. |
| Sessions Judge (FAC),<br>Special Court for trial of cases under SC and ST (PoA) Act,<br>Salem. |